PANCHAYAT UNION MIDDLE SCHOOL, PALLAPATTI, NALLAMPALLI UNION, DHARMAPURI

# எட்டாம் வகுப்பு – அறிவியல் அலகு-1 அளவீட்டியல்

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக**

1. கீழ்க்கண்டவற்றுள் எது ஆங்கிலேய அலகு முறை?

   அ) CGS ஆ) MKS இ) FPS ஈ) SI

2. மின்னோட்டம் என்பது ______ அளவு ஆகும்.

   அ) அடிப்படை ஆ) துணைநிலை

   இ) வழி ஈ) தொழில் சார்ந்த

3. வெப்பநிலையின் SI அலகு ____________

   அ) செல்சியஸ் ஆ) ஃபாரன்ஹீட்

   இ) கெல்வின் ஈ) ஆம்பியர்

4. ஒளிச்செறிவு என்பது ________________ யின் ஒளிச்செறிவாகும்.

   அ) லேசர் ஒளி ஆ) புற ஊதாக் கதிரின் ஒளி

   இ) கண்ணுறு ஒளி ஈ) அகச்சிவப்புக்கதிரின் ஒளி

5. இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மதிப்புகள் நெருங்கி இருப்பது____________.

   அ) துல்லியம் ஆ) நுட்பம்

   இ) பிழை ஈ) தோராயம்

6. பின்வரும் கூற்றுகளில் எது தவறானது?

   அ) தோராயம் என்பது துல்லியமான மதிப்பைத் தரும்

   ஆ) தோராயம் என்பது கணக்கிடுதலை எளிமையாக்குகிறது.

   இ) தோராயம் என்பது குறைவான தகவல்கள் மட்டும் உள்ளபோது பயனுள்ளதாக அமைகிறது.

   ஈ) தோராயம் என்பது உண்மையான மதிப்புக்கு நெருக்கமாக உள்ள மதிப்பினைத் தருகிறது.

Screen shot எடுத்து அனுப்பும்போது
உங்கள் பெயரை இக்கட்டத்தில் டைப் செய்யவும்